# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | MC.04/2022 | Date:27.04.2023 |
| Deposition of Witness for | : | **வா.சா.1** | |
| Name | : | **ஜெயபிரியா** | |

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

**குறுக்கு விசாரணை-**

1. நான் இவ்வழக்கில் தாக்கல்செய்துள்ள என்னுடைய கடன் மற்றும் சொத்துக்கள் அடங்கிய பிரமாணபத்திரத்தில் என்ன படித்துள்ளேன் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதேபோன்று நான் வசிக்கும் வீடு சொந்த வீடா அல்லது வாடகை வீடா என்ற விவரம் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மேலும் எனக்கு குழந்தைகள் இல்லை என்றும், அதற்கான மருத்துவ செலவுகள் இல்லை என்றும் தெரிவித்துள்ளேன் என்றால் அவ்வாறு தெரிவிக்கவில்லை. மேலும் 15.10.2020 முதல் பிரிந்து வாழ்ந்து வருவதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். மேலும் மேற்படி தேதிக்கு 8 மாதத்திற்கு முன்பிருந்தே தாயாரின் வீட்டில் வசித்து வருவதாக ம.சா.ஆ.4 ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. நான் கடந்த 2020ம் வருடம் ஜனவரி மாதம் பாத்ரூம் சுத்தம் செய்யும் ஹார்பிக்கை குடித்து தற்கொலைக்கு முயன்றேன் என்றால் இல்லை. எனது அம்மா வீட்டிற்கு பணம் கொடுக்கவேண்டும் என்று பணம் கேட்டு அதற்கு எதிர்மனுதாரர் மறுத்ததால் நான் பலமுறை தற்கொலை செய்துக்கொள்வதாக மிரட்டியுள்ளேன் என்றால் இல்லை. எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் கல்வடங்கம் , மேட்டாங்காடு என்ற ஊரில் உள்ளது என்றால் எனக்கு இல்லை, எனது தந்தைக்கு உள்ளது. மேற்படி சொத்து எனது தந்தைக்கு அவரது அப்பாவின் மூலம் வந்ததா என்றால் இல்லை தாத்தா கொடுத்த சொத்து 10 செண்ட் தான் உள்ளது. மொத்தமாக எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்றால் சுமார் 80 செண்ட்

உள்ளது. மேற்படி சொத்தின் மதிப்பு சுமார் ஐம்பது லட்சம் இருக்குமா என்றால் இருக்கும். மேற்படி சொத்து பூர்வீக சொத்து என்றும், அதனால் மேற்படி சொத்தில் எனக்கும் பங்குஉள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

3. எனக்கு தங்க நகைகளோ, கடன்களோ இல்லை என்று பிரமாணபத்திரிக்கையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். என் கணவர் பி.ஈ. படிப்பை முடிக்கவில்லை என்றால் சரிதான் இரண்டு பாடங்கள் அரியர் உள்ளது. என் கணவர் பட்டு நெசவு தொழில் செய்கிறார் மற்றும் வட்டிக்கு பணம் விடும் தொழில் செய்கிறார். நான் அவ்வாறு சொல்வது பொய் என்றும், அவர் கூலி வேலை செய்து வருகிறார் என்றும் சொன்னால் சரியல்ல. கொரோனா நோய் தொற்று காலத்துக்கு பிறகு எதிரிமனுதாரர் அவருடைய தந்தையின் சொத்துக்கள் அனைத்தையும் கடனுக்காக விற்றுவிட்டார் என்றும், தற்போது கூலி வேலைக்கு சென்றுவருகிறார் என்றும் சொன்னால் சரியல்ல.

4. எதிர்மனுதாரருக்கு திருமண மண்டபம் இருப்பதாக கூறியுள்ளது பொய் என்றும், மேற்படி திருமண மண்டபம் எதிர்மனுதாரரின் அத்தை வசந்தாவுக்கு சொந்தமானது என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிமனுதாரர் பள்ளிகூடம் எதுவும் நடத்தவில்லை என்றும் எதிர்மனுதாரரின் தாத்தா சேவை செய்யும் நோக்கத்துடன் மேற்படி பள்ளிகூடம் ஆரம்பிக்கப்பட்டது என்றும் எதிரிமனுதாரர் தற்போது பள்ளிகூடம் எதுவும் நடத்தவில்லை என்றும் சொன்னால் பள்ளிகூடம் மூடப்பட்டுவிட்டது, தற்போது அது திருமண மண்டபமாக உள்ளது.

5. மேற்படி பள்ளிகூடத்திலிருந்து எதிர்மனுதாரருக்கு எந்தகாலத்திலும் வருமானம் வந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் அவருடைய தாயாருக்கு சொந்தமான வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். வரதட்சனையாக என்ன கேட்டார்கள் என்றால் 40 பவுன் தங்க நகைகளும், பணம் ரூபாய் பத்து லட்சமும் மற்றும் எனது தந்தையின் சொத்தில் பாதியும் கேட்டார்கள். மேற்படி வரதட்சனை எப்போது, எங்கு யார் யார் கேட்டார்கள் என்றால் திருமணம் முடிந்த ஒரு மாதத்தில் என் கணவரின் வீட்டில்வைத்து என் கணவர், ராஜராஜேஸ்வரி, வைஷ்ணவி, புவனேஷ், சாந்தி, கார்த்தி ஆகியோர்கள் கேட்டார்கள்.

6. திருமணத்திற்கு முன்பு யார் யார் கேட்டார்கள் என்றால் ராஜராஜேஸ்வரி, கார்த்தி ஆகியோர்கள் 40 பவுன் தங்க நகைகள் நிச்சியத்திற்கு பிறகு கேட்டார்கள்.

2016 ம் வருடம் செப்டம்பர் 5 ம் தேதி , கல்வடங்கம் , அங்காளம்மன் கோவிலில் வைத்து திருமணம் உறுதிசெய்யப்பட்டது என்றால் சரிதான். திருமணம் நிச்சியதார்த்தம் திருமணத்திற்கு முதல்நாள் நடைபெற்றது என்றால் இல்லை மேற்படி செப்டம்பர் 5 ம் தேதி தான். மேற்படி திருமணம் உறுதிசெய்த நாள் அன்று இருவீட்டு பெரியோர்கள் கூடியிருந்தனர் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு வரதட்சனை எப்போது கேட்டார்கள் என்றால் வரதட்சனை கேட்டிருந்தால் திருமணமே செய்துக் கொண்டிருக்கமாட்டேன்.

7. திருமணத்திற்கு நகைகள் எங்கு வாங்கினோம் என்றால் ஏ.வி.ஆர். ஸ்வர்ண மகாலில் வாங்கினோம். நகைகளின் ரசீதுகள் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு அந்தியூர் , ராணி மருத்துவமனையில் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். பிரசவ தேதிக்கு முன்பே மருத்துவமனையில் சேர்ந்துவிட்டேன் என்றால் சரிதான். என் கணவர் தான் மருத்துவமனையில் சேர்த்துவிட்டார் என்றும், அவர் தான் மருத்துவ ஆவணங்களில் கையொப்பம் செய்துள்ளார் என்றால் அம்மா தான் அழைத்துசென்றார்.

8. பிரசவத்திற்கு முன்பு சேலம், கொண்டலாம்பட்டி பைபாஸ் அருகே உள்ள சிவசூரியா மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் ஐந்து மாதம் தான் அங்கு சிகிச்சை எடுத்துக்கொண்டேன். எனக்கு வளைகாப்பு விழா எப்போது நடத்தப்பட்டது என்றால் 2017 ம் வருடம், வைகாசி மாதம் நடைபெற்றது. வளைகாப்பு முடிந்தவுடன் அம்மா வீட்டிற்கு சென்றேனா என்றால் இல்லை சுமார் 40 நாட்கள் கழித்து அம்மா வீட்டிற்கு சென்றேன். பிரசவத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்புதான் அம்மா வீட்டிற்கு சென்றேனா என்றால் ஆமாம். என் பெற்றோர் வீட்டில் சரியாக மருத்துவ வசதி மற்றும் செலவுகள் செய்யமாட்டார்கள் என்பதால்தான் வளைகாப்பு முடிந்தும் நான் என் கணவர் வீட்டில் இருந்தேன் என்றால் சரியல்ல மருத்துவ செலவுகள் அனைத்தையும் எனது அம்மா தான் கொடுத்தார்.

9. நான் கருவுற்றதிலிருந்து பிரசவம் வரை செலவுகள் அனைத்தையும் எனது கணவர்தான் செய்துவந்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் சகோதரி வைஷ்ணவி என்பவரின் மகள் மோகனஸ்ரீக்கு தற்போது 13 வது ஆகிறது என்றால் இல்லை 17 வயது ஆகிறது. என் கணவர் மேற்படி மோகனஸ்ரீ யை இரண்டாம் திருமணம் செய்துக்கொள்ள இருக்கிறார் என்று நான் குற்றம் சுமத்திய போது மேற்படி மோகனஸ்ரீக்கு 10 வயது தான் இருந்தது என்றால் சரியல்ல 15 வயது

இருக்கும். என் கணவர் வீட்டுக்கு அருகிலேயே தான் வேலை செய்துவந்தார் என்றால் வீட்டிலிருந்துதான் வேலைசெய்து வந்தார். எனவே பெரும்பாலும் என் கணவர் வீட்டிலேயே தான் இருப்பார் என்றால் இல்லை வாரத்திற்கு மூன்று நாட்கள் சேலம் செல்வார்.

**(எதிர்மனுதாரர் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

S R BABU Digitally signed by S R BABU Date: 2023.04.27 16:39:02 +0530

Sd /- Jayapriya

Judicial Magistrate No.1,
Sankari.